DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. STC .No. 148 / 2021

Deposition of DW1 – Cross - **திருமதி. ஜெ. ஸ்வீட்டி ஏஞ்சலின் மெர்சி**

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25.11.2025.

<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் அரசு பள்ளி ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். புகார்தாரர் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர். புகார்தாரர் எனது பக்கத்து ஊர்காரர் தான். புகார்தாரர் எனது கணவர் மூலமாக எனக்கு அறிமுகமானார். புகார்தாரரை எனக்கு 10 ஆண்டுகளாக தெரியும். நான் ஆண்டிபட்டி SBI வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் கணக்கு இன்று வரை நடப்பில் உள்ளது. ம.சா.ஆ.1 எனக்கு சொந்தமான காசோலை எனது சேமிப்பு கணக்கு வங்கியால் எனக்கு வழுங்கப்பட்ட காசோலை ஆகும். ம.சா.ஆ.1யில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம்தான். காசோலையானது 5 லட்சத்திற்கானது அதில் கையொப்பம் மட்டும் தான் நான் செய்தேன். ம.சா.ஆ 2 குறித்து ஏதெனும் ஆட்சேபனை உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாது. ம.சா.ஆ.3 ஆவணமானது நான் கொடுத்த காசோலை பணம் இல்லை என்று Refer to drawer ஆவணம் என்றால் நான் ஏற்கனவே காசோலையை Lock செய்துவிட்டேன். எந்த தேதியில் Lock செய்தேன் என்றால் தேதி சரியாக தெரியவில்லை. Lock செய்தேன் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். Refer to drawer என்று குறிப்பிட்டு திருப்பட்டால் அது பணம் எனது வங்கி கண்க்கில் இல்லை என்பதற்கான ஆவணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

மனுதாரர் சான்று ஆவணம்.4 – எதிரி எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். நோட்டீசை நான் பெற்றுக்கொண்டேன். ம.சா.ஆ.6 யில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நோட்டீசை பெற்ற பின்பு நான் எதிரிக்கு தாவா காசோலை தொகையை கொடுக்கவில்லை என்றால் நான் அவரிடம் பணம் வாங்கவில்லை. கிரைய உடன்படிக்கை ஆவணத்திற்கும் ஈடுகடன் ஆவணத்திற்கும் உள்ள வேறுபாடு எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் சமூக நீதிமன்றத்தில் அளித்த முதல் விசாரணை சாட்சியத்தில் 2015 ஆண்டு

புகார்தாரரிடம் எனது கணவர் 1 லட்ச ரூபாய் வாங்கினார் அதற்கு ஈடாக 2 லட்ச ரூபாய் மதிப்பு உள்ள பத்திரத்தை எனது கணவர் புகார்தாரரிடம் கொடுத்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான்.

மேற்படி வாசகமானது எ.ம.சா.ஆ.1 யில் உள்ளதா என்றால் இல்லை. எனது முதல் விசாரணையில் 1 லட்சம் தொகையை கொடுத்துவிட்டு அதற்கு ஈடாக கொடுத்த பத்திரத்தினை திருப்பிக்கொண்டோம். அதற்கான ஆவணம் தான் எ.ம.சா.ஆ.2 என்று கூறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாசகங்கள் எ.ம.சா.ஆ.2. யில் இல்லை என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கையாக தான் பதிவு செய்து கொடுத்தோம். அந்த கிரைய உடன்படிக்கையைதான் ரத்து செய்தோம். எனது கணவருடைய பெயரில் இருந்த பத்திரத்தை பதிவு செய்து அழகர்சாமி பதிவு செய்து வாங்கினார் மீண்டும் பணம் கொடுத்த பின்பு பத்திரத்தை ரத்து செய்து கொடுத்தார் எனவே இது ஈடாக கொடுத்தார் என்பது எனக்கு புரியாமல் சொன்ன வார்த்தை. எ.ம.சா.ஆ.1 ,2 யில் நான் தரப்பினர் கிடையது என்றால் சரிதான். அந்த பத்திரத்தின் விபரம் எனக்கு தெரியும். இந்த எ.ம.சா.ஆ.1,2 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சம்மந்தம் உள்ளது. எனது முதல் விசாரணையில் 2019 வருடம் புகார்தாரரிடம் 5 லட்சம் பணத்தை எனது கணவர் வாங்கினார் அதற்கு ஈடாக 11 லட்சம் மதிப்பிலான பத்திரத்தை என் கணவர் புகார்தாரரிடம் கொடுத்தார் என்று சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். அதற்கான ஆவணம் எதுவும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா காசோலையை Surity க்காக புகார்தாரரிடம் கொடுத்தாக சொல்லியுள்ள விபரம் தவறு என்றால் சரியல்ல.

புகார்தாரரிடம் எனக்கு சொந்தமான ATM card யை கொடுத்து அதன் மூலம் புகார்தாரர் மாதம் ரூபாய் 20 ஆயிரம் எடுத்து கொண்டு மீதி இருக்கும் பணத்தினை புகார்தாரர் என்னிடம் கொடுத்துவந்தார் என்ற சங்கதி இயல்புக்கு மாறான பொய் என்றால் சரியல்ல. நான் Surity க்காக தாவா காசோலையை கொடுக்கவில்லை என்றாலும் ATM Card யை புகார்தாரர் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. மேற்கண்ட சங்கதிகளை நிரூபிக்க நான் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய ATM Card யை அவர்தான் வைத்திருந்தார். தற்சமயம் மேற்படி ATM Card என்னிடம் தான் உள்ளது. நான் இதை தவிர வேறொரு நிரப்பப்படாத காசோலையை புகார்தாரரிடம் கொடுத்ததாக சொல்லியுள்ள சங்கதி பொய் என்றால் சரியல்ல. மேற்படி காசோலை மற்றும் ஆவணங்களை மீட்டுவதற்கு புகார்தாரருக்கு

எதிராக ஏதெனும் சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி சங்கதிகளுக்கு புகார்தாரர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எனது கணவர் அன்னலட்சுமி என்பவரை முதல் திருமணம் செய்து 3 குழந்தைகள் உள்ளது என்றால் சரிதான். முறைபடி அவர்களுக்குள் விவாகரத்து செய்யவில்லை என்றால் சரிதான்.

நானும் மாரிச்சாமியும் திருமணம் செய்யாமல் வாழ்ந்து வருகிறோம் என்றால் திருமணம் செய்து தான் வாழ்ந்து வருகிறோம். மாரிச்சாமி மற்றும் எனது வரவு செலவு தனி தனி என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரரிடம் கடந்த 15.04.2021 தேதி ரூபாய் 5 லட்சம் நான் நேரடியாக ரொக்கம் பெற்று கொண்டு தாவா காசோலை கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது வங்கி கணக்கில் போதிய பணம் இல்லை என்ற விபரம் நன்கு தெரிந்து கொண்டே தாவா காசோலையை புகார்தாரரிடம் கொடுத்து ஏமாற்றியுள்ளிர்கள் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 பிரகாரம் ரூபாய் 5 லட்சம் சட்டப்படி புகார்தாரருக்கு கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. மாற்று முறை ஆவண சட்ட பிரகாரம் நான் தண்டிக்கப்படகூடிய குற்றம் புரிந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2025.11.25 17:41:01 +0530

Judicial Magistrate,
Andipatti.